# நடப்பு நிகழ்வுகள் ஜனவரி 9 2018

- சென்னையில் முதன் முறையாக ராணுவக் கண்காட்சி ஏப்ரல் 11 ந் தேதி முதல் 14ந் தேதி வரை நடைபெறும் என்று மத்திய அமைச்சா் நிர்மலா சீத்தா ராமன் தெரிவித்துள்ளார்.
- கி.மு. 5000 – 1500 காலத்தைச்சேர்ந்ததொல் தமிழரின் ஈமக்காடு கண்டுபிடிப்பு திருவள்ளுவா் மாவட்டம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் கல்லூரி வளாகத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- ஜனவரி 2018 இல் நடைபெற்ற போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு, பிரச்சனையை தீர்க்க மத்தியஸ்தராக் ஓய்வு பெற்ற நீதிபதி பத்மநாபனை நியமித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- ஐ.நா. உலக சுற்றுலா நிறுவனத்தின் (United Nations World Tourism Organisation) சுற்றுலா துறையில் புதுமைக்கான விருது” (Innovation in Tourism Enterprise) ஒடிஷா மாநிலத்திலுள்ள “மங்களஜோடி ஈ.கோ. டுரிஸம் டிரஸ்ட் (Mangalosodi Ecotovrism Trust) எனும் அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- பரத நாட்டியத்திற்கான சங்கீத நாடக விருது 2016 கீதா சந்திரன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- “கோல்டு மற்றும் ஐகான்” (Gold and ICON) புவிப் பரப்பிலிருந்து 96km உயரத்தில் அமைந்துள்ள அயனி மண்டலத்தை (Ionosphere) ஆராய்ச்சி செய்வதற்காக அமெரிக்கா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா GOCD and ICON என்ற பெயரில் இரண்டு செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு அனுப்பவுள்ளது.
- செயற்கை கோள் உதவியுடன் இடம் பெயர்வு தேவைக்காக,BeiDou – 3 – M7, Bei Dou – 3 M8” எனப் பெயரிடப்பட்டுள்ள இரண்டு புதிய செயற்கை கோள்களை சீனா விண்ணில் செலுத்தியுள்ளது.
- GSAT – 11 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தியாவின் அதிக எடை கொண்ட செயற்கைக் கோள் நாட்டின் இண்டர்நெட் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட உள்ளது. அமெரிக்காவின் பிரஞ்சு கயானா பகுதியில் கோயவு விண்வெளி தளத்திலிருந்து பிரெஞ்சு அரைன் என்ற தளத்தின் மூலம் அனுப்படவுள்ளது.
- மும்பையில் நடைபெற்ற மாராத்தான் போட்டியில் எத்தியோபியாவைச் சேர்ந்த காலமன் டெக்சின ஆடவா் பிரிவிலும், சக நாட்டவரான அமானே கொபேனா மகளிர் பிரிவிலும் சாம்பியன் ஆகினார்.